# திருக்குறள் முன்வைக்கும் ஈதல் மேலாண்மை

5

முனைவர் ப. சின்னச்சாமி
உதவிப்பேராசிரியர் (தமிழ்), மொழித்துறை,
ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி, சூலூர் – 641 402.
chinnatamil8833@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகத்திலிருந்து முற்றாகத் துடைத்து எறிந்துவிட முடியாது நிலைபெற்றுவிட்ட ஆதிப்பொதுவுடைமைச் சமூக எச்சக்கூறுகள், அச்சமூகத்தில் எழுதப்படும் படைப்புகளுக்குள் உயிர்ப்புப் பெறுவதும், கருத்துமுதல்வாதத்தோடு சிலவகையான சமரசங்களைச் செய்துகொண்டு இருப்புக் கொள்வதும் கருத்துமுதல்வாத வழித்தடத்தில் வந்தோரின் வாசிப்பில், நிலவுடைமை அறங்களாக, குறிப்பாக உயர்ந்தோருக்கான அறங்களாக மடைமாற்றம் செய்தலும் நடந்தேறியுள்ளது. அந்தவகையில், பொதுவுடைமைச் சமூகத்தை அழித்தொழித்த சூழலில் உயிர்ப்புற்ற அறநூல்களில், கருத்துமுதல்வாதத்தின் வலிமையான மேற்கட்டுமானத்தில் பொதிந்துவிட்ட பொருள்முதல்வாதம் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள முடியாமல் தனது இருப்பைத் தொலைத்துக் கொண்டது அல்லது சமரசப்படுத்திக் கொண்டது. தொடர்ச்சியான வரலாற்றில் ஆதிப்பொதுவுடைமைச் சமூக அறத்தைக் காத்தவர்களுடைய வாழ்வியல் அறங்களை முன்னோர் சொல் என்று கருத்துமுதல்வாதப் பின்னணியுடன் கொணர்ந்து சேர்க்க வேண்டிய கட்டாயத்தினை திருவள்ளுவர் உணர்ந்திருந்தார் எனக் கருதுவது பொருத்தப்பாடாய் அமையும்.

**திறவுச் சொற்கள்** அறம், ஈதல், திருக்குறள், ஆதிப்பொதுவுடைமை, பொருள்முதல்வாதம்

**முன்னுரை**

ஆதிப்பொதுவுடைமைச் சமூக வாழ்வியலின் முக்கிய அங்கமாக விளங்கிய பாலியல் சுதந்திரம், உணவுப் பகிர்வு என்பவை உடைமைச் சமூகத்தால் கட்டுபாட்டுக்குள்ளும் கடமைக்குள்ளும் கொண்டுவரப்பட்டன. இதில் பாலியல் சுதந்திரம் குறித்து களவியல் மிக நுட்பமாகப் பேசுகிறது. உணவுப் பகிர்வு குறித்து,

1. உடைமைப் பண்பும் உணவுப் பகிர்வும்

என்ற பொருண்மையின் கீழ் இக்கட்டுரை ஆராய்கிறது.

**உடைமைப் பண்பும் உணவுப் பகிர்வும்**

உடைமைச் சமூகத்தில் மக்களுக்குக் குறை என்பது உணவுதான். பசித்த வயிறுக்கு உணவு வழங்குதல் ஈகை என்றழைக்கப்படுகிறது. உணவு தேவைப்படும்போது உணவு கிடைக்கின்ற ஒருவன், பசித்திருக்கும் ஒருவன் என்ற முரண்பாடு உடைமைச் சமூகத்தில் தலையாய பிரச்சனையானது.

**“உறுபசியும் ஓவாப் பிணயும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு” (குறள். 734)**

என்கிறார் வள்ளுவர். உறுபசி என்பது உடைமைச் சமூகத்தில் அதிமுக்கியப் பிரச்சனையாகிறது. அது நோயுடனும் பகையுடனும் ஒப்பிடப்படுகிறது.

பசிக்கு உணவிடுதல் என்பது உடைமைச் சமூகத்தில் உடைமை ஓரிடத்தில் குவியப்படுவதும் பிறருக்கு அது எட்டாக்கனியாக இருப்பது காரணமாகிறது. இதை நிவர்த்திசெய்ய உடைமைப் பகிர்வைத் தவிர்த்து பசிக்கு உணவிடுதல் என்பதற்கு ஈகை போன்ற அறக்கருத்தியல்கள் உருவாக்கப்பட்டன. ஈதலறத்தைக் கடைபிடித்து ஒழுகுவதற்கு ஆதிப்பொதுவுடைமைச் சமூகத்தின் பகிர்ந்திருத்தல் விழுமியத்தை எடுத்துக்காட்டி அறம் வகுக்கவேண்டிய தேவை இருந்துள்ளது.

**“பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்**

**தீப்பிணி தீண்ட லரிது” (குறள். 227)**

இவ்வாறு பகுத்துண்ணுதலின் அவசியத்தையும், அதனால் விளையும் நன்மைகளையும் திருக்குறள் எடுத்துரைக்கிறது. பகுத்துண்பதனால் பசிப்பிணி தீண்டாது, நீண்டநாள் வாழ்வர் என்பது உடைமைச் சமூகத்திற்கு ஆறுதலான அறமாகும். உடைமையாளர்கள் செல்வத்தை அனுபவிக்க நீண்டநாள் வாழ வேண்டும் என்ற அவதனிப்பை அறமாக மொழிந்து ஈதலறத்தைச் செய்யத் தூண்டுகின்றன.

**“ஈகை, உதவி, நன்றி, செய்ந்நன்றி என்பவையெல்லாம் தனி உடைமைச் சமூக உருவாக்கத்தின் ஏற்றத் தாழ்வான முறைமையால், அந்த முறைக்குச் சாதகமானதாய்ச் செயல்பட்ட அறக்கருத்துக்கள் என்பதில் ஐயமில்லை. இருப்பவன் - இல்லாதவன் என்ற ஒழுங்கமைப்பில்தான் இப்படிப்பட்ட நீதிகளுக்குச் செல்லுபடித்தன்மை இருக்கும். உடைமை நாகரிகத்திற்கு முந்தைய இனக்குழு நாகரிகத்தில் இவற்றிற்கு இடமிருந்ததில்லை. பகுத்துண்ணல், கூட்டுண்ணல், பாதீடு போன்ற குழு நாகரிகத்தின் இயல்புகளே வினைபுரிந்தன. இவை, குழு நாகரிகத்தில் மாந்தரின் கடமையாக இன்றி அவர்தம் இயல்புகளாகவே இருந்தன. இயற்கையோடு சம்பந்தப்பட்டிருந்தன. உடைமை நாகரிக உருவாக்கத்தின்போது இவையே அறமுக்கியத்துவம் பெற்று உடையோர் தம் கடமையாக நன்னடத்தை சார்ந்ததாக ஆயின.” (பொய்+அபத்தம் = உண்மை, ப. 12)**

என்ற ராஜ்கௌதமன் கூற்றின்வழி பகுத்துண்ணல் என்ற பொருள்முதல்வாதச் சிந்தனை மரபு உடைமைச் சமூகத்தில் அறமதிப்பீட்டுச் சொல்லாடலாக்கப்பட்டு முக்கியத்துவம் மிக்கதாக மாற்றப்படுகிறது என்பதை அறியமுடிகிறது. அதுவே பேரறமாக முன்மொழியப்படுகிறது. படிநிலைச் சமூகத்தில் உணவு என்பதும் படிநிலைத் தன்மை கொண்டதாகவே இருந்துள்ளது. வறியவர்கள் உணவு பெறுவதும், உயர்ந்தவர்களுக்குப் பொருள் கொடுத்தலும் சங்க, அறச் சமூகத்தில் காணப்பட்ட முரண் வாழ்வியலாகும்.

உடைமைச் சமூக உற்பத்தியான இந்த முரண் வாழ்வியலை நிவர்த்தி செய்ய ஈகை, தானம், கொடை, விருந்தோம்பல் என்ற மதிப்பீட்டு சொல்லாடல்களின்வழி அறம் வகுக்கவேண்டிய அவசியம் உருவானது. இவை உடைமைச் சமூக அதிகாரவர்க்கம் உடைமையற்றவர்களின் மீது ஏகபோக அதிகாரத்தைச் செலுத்த கட்டமைக்கப்பட்ட கருத்துருவங்களாக அமைத்துக்கொண்டன.

இதில், 1. ஈகை என்பது இரப்பவர்களுக்கு, வறியவர்களுக்கு உணவளிப்பது. மறுமைக்கான இராஜபாட்டையாகிய புகழைப் பெறுவதற்கான வழிமுறைகளில் ஒன்றான ஈகைப் பற்றின அறம்போதித்தல் இருநிலைகளில் நிகழ்த்தப்பட்டுள்ளது. அதன்படி ஈதல் பண்பு என்பது உயர்ந்தோருக்கானதாகவும் அதைப் பெறுதல் அல்லது இரத்தல் கீழோர்குணம் என்றும் எதிர்மறையுடன் கூடிய கருத்தாக்கங்களைச் சமூகத்தில் விதைத்தனர். 2. தானம், 3. கொடை இறுவேறுநிலையில் வழங்கப்பட்டுள்ளன. மூளை உழைப்பை மேற்கொண்டோருக்குத் தானமும், உடலுழைப்பை மேற்கொண்டோருக்குக் கொடையும் வழங்கப்பட்டுள்ளது. புலவர்கள், புரோகிதர்கள், கல்வி கற்பிப்பவர்கள் மூளை உழைப்பாளர்களாகவும் அடித்தட்டு மக்கள் உடலுழைப்பாளர்களாகவும் இருந்துள்ளனர். அரசதிகாரம் உழைக்கும் மக்களிடமிருந்து சுரண்டிய செல்வத்தை மூளை உழைப்பாளர்களுக்குத் தானமாகக் கொடுத்துப் புகழை உண்டாக்கிக் கொண்டனர். 4. விருந்தோம்பல் குருதி உறவுகளுக்குள் கொடுக்கல், வாங்கல் தொடர்புடையது என்பதடிப்படையில் இந்நான்கும் வேறுபாடு கொண்டிருக்கிறது. இந்நான்கு கருத்தியல்களும் உடைமையாளர்களுக்கும் அரசதிகாரத்திற்கும் சேவகம் செய்யக்கூடியதுடன் உடைமையற்றவர்களின் எதிர்ப்புக் குரல்களை ஒடுக்கும் கருத்தாயுதமாகச் செயலாற்றியிருப்பதைக் காணமுடிகிறது. இதில் ஈகை குறித்து மட்டும் இங்கு உரையாடப்படுகிறது.

**ஈகை**

வறியவர்களுக்கு ஈதலே ஈகை என்று அற இலக்கியங்கள் பொது அறமாக அடையாளப்படுத்துகின்றன. வறியவர்கள் தவிர மற்றவர்களுக்கு ஈவது எதிர்பார்ப்பு கொண்டது. அது ஈவதில் அடங்காது என்பதை,

**“வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து” (குறள் 221)**

என்ற குறள் எடுத்துரைக்கிறது. வறியவர் உடைமைச் சமூகத்தின் உற்பத்தியாளர். பாதீடு, பகுத்துண்ணல் உடைமைச் சமூகத்தில் ஈகை என்று எஞ்சிநிலைத்த வாழ்வியல் அடையாளமாக மாற்றமடைகிறது. சமப்பகிர்வு மறுதலிக்கப்பட்டு கொடுக்கும் உரிமையை கொடுப்பவரின் முழு அதிகாரத்திற்கு விடப்படுகிறது. அவர் கொடுக்கும் அளவைப் பெறுதல் வறியவர்களுக்குக் கடமை. இச்செயல்முறைக்கு ஈகை என்ற அடையாளம் கொடுக்கப்படுகிறது. இது உடைமையாளர்களின் உயர்குடிப் பண்பாக வடிவமைத்தமைக்குப் பின்னணியில் கீழ்மையாக்கப்பட்ட குடிகள் உயிர் வாழ்தலை உறுதிப்படுத்துதல் அடங்கியுள்ளதுடன் ஈதல் மூலம் பெறப்படும் ஊதியம் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

இனக்குழுச் சமூகம் முன்வைத்த ஈதலும் பகிர்தலும் நிலவுடைமைச் சமூகத்தில், தன் தேவைக்கும் மேலாக இருக்கும் பொருளை, இரந்தவர்க்கு இல்லையென்று ஒளித்தலைப்போல் கொடுமையான செய்கை வேறில்லை என்று அறிவுறுத்திப் பெறுவதாக மாறிவிட்டது. இதைத் திருக்குறள்,

**“ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல**

**தூதிய மில்லை உயிர்க்கு” (குறள். 231)**

என்று ஈதலை மறுமைக்கான ஊதியமாக்குகின்றது. அதாவது, ஈதல் → புகழ் → மறுமை → முக்தி என்ற படிநிலை அமைப்பைப் பெறுகிறது.

ஊதியமற்ற செயலை ஒருபோதும் விரும்பி ஏற்றுக்கொண்டதாக சொத்துடைமைச் சமூகம் இருந்திருக்கவில்லை என்று நோக்கும் ராஜ்கௌதமனின் கருத்து இங்குக் கவனிக்கத்தக்கதாகும்.

**“பொதுவாக உடைமைச் சமூகத்தில் ‘ஊதியம்’ என்பது செலவின் வழியாக வரும். ஈகை, கொடை, தானம் முதலானவை செலவு அதனால் கிடைக்கும் புகழ், உயர்தகுதி, உடைமைக்கு உரிமைபூணும் தகுதி ஆகியன ஊதியமாம்” (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப. 71)**

என்று அவர் கூறுவதிலிருந்து, தனியுடைமையின் பொருள்வேட்கையைத் தணிக்க ஈகை, கொடை, தானம் செய்தால் அவர்களுக்கு ஊதியமாக புகழ், உயர்தகுதி, கிடைத்தற்கரிய மறுவுலகம் கிடைக்கும் என்று கற்பிதம் செய்யப்பட்டது என்பது வெளிப்படுகிறது. நிலவுடைமைச் சமூகத்தில் எல்லாச் செயல்பாடுகளும் மறுமை என்ற ஊதியத்தை முன்னிறுத்தியதாகக் கட்டியெழுப்பப்பட்டது. புகழ், கொடை, கல்வி போன்ற தனிமனித ஒழுக்கலாறுகள் முக்தி, மறுமை என்ற கற்பித உலகை அடைவதற்கான ஊழியங்களாக ஒருங்கிணைக்கப்பட்டமையால் பொருள்முதல்வாதம் இருப்பின்றி கருத்துமுதல்வாதத் தளத்திற்குள் முடக்கப்பட்டுள்ளது.

ஆதிப்பொதுவுடைமைச் சமூகத்தில் சமூக வாழ்க்கையின் அங்கமாக இருந்த ஈதல் உடைமைச் சமூகத்தில் கருத்துமுதல்வாதம் முன்னிறுத்தும் மறுமையோடு சேர்த்துக்கட்டப்பட்டுள்ளது. சங்ககால இலக்கியங்களில் வீரசுவர்க்கம், வீரமரணம் என்பதுடன் தொடர்புற்றிருந்த புகழ் அறநூல்களில் கல்வி, ஈகை என விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஈகை என்பது உடைமைச் சமூகம் குடிகளின் மீது செலுத்திய வன்முறையாகும். பலனை எதிர்பாராது செய்த உழைப்பு வறுமைக்குத் தள்ளியுள்ளது. ஈகைப் பண்பின் மீது அதிகாரத்திற்கு ஆதரவாகச் செயல்பட்ட கருத்துமுதல்வாதத்தைப் புகுத்தினர்.

**“பசித்தவனுக்கு, நன்கு உண்பவன் வழங்கும் உணவு அவனுக்கு ஈகைதரும் புகழை, பெரும் தகுதியை வழங்குகிறது. இவ்வாறு உணவு என்பது அதிகாரப் பண்பைப் பெற்றுவிடுகிறது” (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், ப. 40)**

என்ற ராஜ்கௌதமனின் சிந்தனை அதிகாரத்தின் ஈகைப் பின்னணியை உணர்த்துகிறது. உடைமையாளர், உடைமையற்றவர் என்ற முரண்பாட்டிற்குள் இது உடைமையாளர்களுக்கு நன்றிக்கடன்பட்டவர்களாக உடைமையற்றவர்களை அடிமைப்படுத்தும் கருத்தியல் வடிவமைப்பாகும்.

ஈகையின் மூலம் பெறப்படும் ஊதியம் அடுத்த பிறவியிலும் உடைமையாளனாகப் பிறப்பதற்கு அல்லது அதற்கும் மேம்பட்டவராகப் பிறப்பதற்கு இப்பிறவியில் ஏற்படுத்திக்கொள்ளும் செயல்முறைத் தந்திரமாகும். பகிர்ந்துண்ணல் அறவே ஒழிக்கப்பட்ட சூழலில் பகிர்ந்துண்ணலின் அவசியம் குறித்து பேசுவதன் அவசியத்தை திருக்குறள் கையிலெடுத்துள்ளது. பசியை மறத்தல் என்பதை விட ஆற்றுதல் அவசியமானது. அவ்வகையில்

கருத்துமுதல் சிந்தனையைப் பொருள்முதல் சிந்தனையின் மீது ஏற்றி வறியவர்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள திருக்குறள் முயற்சித்துள்ளது என்பது அறியலாகிறது.

இது ஒருபுறமிருக்க, ஈகையின் மூலம் அதிகாரத்திற்கு ஆட்பட்ட குடிகளாக ஆக்குவது எளிமையான நடவடிக்கையாக அமைகிறது. இங்கு 'நன்றிக்கடன் படுதல்', 'ஆட்படுத்திக் கொள்ளுதல்' என்பதன் வழி பொருள்முதல் சிந்தனை அடித்தளமாகவும் கருத்துமுதல் சிந்தனை மேற்கட்டுமானமாகவும் கட்டமைக்கப்படுவதை திருக்குறள் வழி அறியமுடிகிறது.

**முடிவுரை**

சமப்பகிர்வு மறுதலிக்கப்பட்ட உடைமைச் சமூகத்தில் ஈதல் உரிமையைக் கொடுப்பவரின் முழு அதிகாரத்திற்கு விடப்படுகிறது. அவர் கொடுக்கும் அளவைப் பெறுதல் வறியவர்களுக்குக் கடமையாக்கப்படுகிறது. இச்செயல்முறைக்கு ஈகை என்ற அடையாளம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஈதல் மூலம் பெறப்படும் ஊதியம் அடுத்த பிறவியிலும் உடைமையாளனாகப் பிறப்பதற்கு அல்லது சொர்க்கத்தை அடைவதற்கு இப்பிறவியில் ஏற்படுத்திக் கொள்ளும் செயல்முறையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பகிர்ந்துண்ணல் ஒழிக்கப்பட்ட சூழலில் அதன் அவசியத்தை ஈதல் என்ற செயல்முறையின் மூலம் சமூகத்தைச் சீரமைப்பு செய்ய வழிவகை செய்கிறது திருக்குறள் என்பதைக் காணமுடிகிறது.

**துணைநூற்ப்பட்டியல்**


1. திருவள்ளுவர், 2012, திருக்குறள் (பரிமேலழகர் உரை), 15ஆம் பதிப்பு, சென்னை. சாரதா பதிப்பகம்.
2. ராஜ்கௌதமன், 2008, தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், முதற்பதிப்பு, கோயம்புத்தூர். விடியல் பதிப்பகம்.
3. ராஜ்கௌதமன், 2018, பொய் + அபத்தம் = உண்மை, முதற்பதிப்பு, சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.